# LINC என்பது என்ன?

LINC என்பது குடியுரிமை குடியேற்ற பிரிவினூடே, கனேடிய அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்ட ஒரு ஆங்கில மொழிப்பயிற்சி திட்டமாகும்.

பீல் மற்றும் ஹோல்டன் (Peel and Halton) பிராந்தியங்களில் LINC கூட்டுறவுகளை அமைக்கின்ற சமூக ஸ்தாபனங்களாலும் கல்வி, கல்லூரி மன்றங்களாலும், பீல் மற்றும் ஹோல்டன் பிராந்தியங்களில் LINC வகுப்புகள் வழங்கப்படுகின்றன.

***எமது குறிக்கோள்:***

ஆங்கிலம் கற்க விரும்பும் **அல்லது** ஆங்கில மொழித்திறனை மேம்படுத்த விரும்பும் வயதுவந்த குடியேறியவர்களிற்கு மொழிப்பயிற்சி வழங்குதல் ஆகும்.

***தகுதியுடைய வாடிக்கையாளர்கள்:***

- வயதுவந்தோர்கள், 18 வயதும் அதற்கு மேற்பட்டதும்
- பதிவுசெய்யப்பட்ட, நிரந்தர குடியேறியோர்கள் **அல்லது** அங்கீகரிக்கப்பட்ட அகதிகள்
- பீல் அல்லது ஹோல்டன் பிராந்தியத்தில் வசிக்கின்ற, தொழிற்புரிகின்ற, அல்லது பிராந்தியத்தினுள் இடம்பெயர்கின்ற வயதுவந்தவர்கள்
- மதிப்பீட்டு சந்திப்பிற்கு வாடிக்கையாளர்கள் **கட்டாயமாக** அவர்களது மூல குடியேற்ற பத்திரங்களை கொண்டுவருதல் அவசியமாகும்.

***சேவைகள்:***

ஒரு மதிப்பீட்டு நேர்முகச் சந்திப்பானது வாடிக்கையாளரின் தகுதியுடைமையை உறுதிப்படுத்துவதுடன், வயதுவந்த குடியேறிகளின் தற்போதைய ஆங்கில மொழித்தேர்ச்சியை அறிந்து, பின்பு அதற்கேற்ப அவர்களின் தேவைகளை தகுந்த மொழிப்பயிற்சி தேர்வுடன் இணைக்கின்றது.

மதிப்பீட்டு நிலைய நேரங்கள்:
- திங்கள் முதல் வெள்ளி வரை
- மு.ப. 8:30 முதல் பி.ப. 4:30 வரை
  *மாலை மற்றும் சனிக்கிழமை மதிப்பீடுகள் கூட கிடைக்கப்பெறும்... தகவல்களுக்கு தொலைபேசியில் அழையுங்கள்!*

LINC வகுப்புகள்:
- முழு-நேரம் **அல்லது** பகுதி-நேரம் ஆவன
- காலை, பகல்வேளை, மாலை, **அல்லது** வாரஇறுதியில் நடாத்தப்படுகின்றன
- பேசுதல், வாசித்தல், எழுதுதல், மற்றும் உற்றுக்கேட்டற் திறன்களின் விருத்தியை மையமாக கொண்டுள்ளன. *கணணி உதவியுடனான மொழிப்பயிற்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளது!*
- **எழுத்தறிவு முதல் தரம் 7** வரை தொடர்கின்றன
- பின்வரும் அமைவிடங்களில் வழங்கப்படுகின்றன:
  - Brampton (பிராம்ப்டன்)
  - Burlington (பேர்லிங்டன்)
  - Caledon (கலிடன்)
  - Halton Hills (ஹோல்டன் ஹில்ஸ்)
  - Malton (மோல்டன்)
  - Milton (மில்டன)
  - Mississuaga (மிசிசாகா)
  - Oakville (ஓக்வில்)

  *இவ்வமைவிடங்களில் சில பொதுப் போக்குவரத்து மற்றும்/அல்லது குழந்தைப்பராமரிப்பு உதவிகளை வழங்கக்கூடும்.*

வழக்கமான LINC வகுப்புகளிற்கு செல்லமுடியாதவர்களிற்கு ஒரு வீட்டு கற்றற் திட்டம் (Home Study Program) கிடைக்கப்பெறும். செவிடானவர்களிற்கும் செவித்திறன் குறைந்தோர்களிற்கும் கூட ஆங்கில வகுப்புகள் அணுகத்தக்கதாகவுள்ளன.